DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC-140/2025 | Taluk | : |
| Deposition of Witness for | : PW-4 | Calling | : |
| Name | : முத்துகுமார் | Religion | : |
| Father Name | : ஆறுமுகம் | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th March 2026.

---

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை:-

1) நான் சிவகங்கை அரசணிபட்டியில் குடியிருந்து வருகின்றேன். நான் TATA ACE - வைத்து ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியாது. கடந்த கடந்த 21.07.2024-ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் நான் எனது TATA ACE – ஓட்டி கொண்டு முத்துகாமாட்சி ஆர்ச் செக்போஸ்டு முன்பாக வந்த போது சிவகங்கை நகர் காவல் நிலைய பெண் போலீசார் ஒருவர் அவரது தகுதிநிலை தெரியவில்லை அவர் என்னை அழைத்து ஒருவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவரிடம் இருந்து ஒரு இருச்சக்கர வாகனம், அலுமினிய வயர்கள், சேலைகள் உள்ளீட்டவற்றை கைப்பற்றினார்கள். அதற்காக நானும், மற்றொருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபரை எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் ஆஜர் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **2-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **2-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 புகைப்படத்தில் உள்ள சேலை, வயர்கள் தான் என் முன்பாக கைப்பற்றப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் தான் என் முன்பாக கைப்பற்றப்பட்டது. அந்த புகைப்படம் எண்ணிக்கை - 2 **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Hostile (அரசு தரப்பில் சாட்சியை **பகுதி** பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பகுதி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் மேலே சொன்ன 2-கையொப்பங்களையும் ஆஜர் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததற்காகவும், எதிரியிடமிருந்து பொருட்களை கைப்பற்றியதற்காகவும் தான் மேற்படி தேதியில், மேற்படி இடத்தில் செய்தேன் என்றால், எனக்கு ஆள் தெரியவில்லை. நான் ஆஜர் எதிரியை காப்பற்றும் நோக்கில் ஆள் தெரியவில்லை என்றும், எதிரியை தெரியாது என்றும் தற்சமயம் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

வயர், சேலை, இருசக்கர வாகனம் ஆகியவை என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றால் நான் போகும்போதே வைத்திருந்தார்கள். ஆஜர் எதிரி என் முன்பாக எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி தேதிக்குபிறகு போலீசார் என்னை மீண்டும் அழைத்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு பற்றி வேறுஎதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC-140/2025 | Taluk | : |
| Deposition of Witness for | : PW-3 | Calling | : |
| Name | : உருமநாதன் | Religion | : |
| Father Name | : மந்தையன் | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th March 2026.

---

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை கண்டணிபட்டி குடியிருந்து வருகின்றேன். நான் நாதன் எண்டர்பிரஸ் என்கிற கூல்டிரிங்ஸ் கம்பெனியில் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.2, அ.சா.1 நடத்தி வரும் Evion pet bottle என்கிற கம்பெனியில் மிஷின் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் மகஜர் மற்றும் வரைப்படம் என் முன்னிலையிலும் அ.சா.2 ஆறுமுகம் என்பவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தது தான். கடந்த 21.07.2024-ம் தேதி காலை 10.00-11.00 மணி இருக்கும், நானும் அ.சா.2-ம் சம்பவ இட வாசலில் நின்று கொண்டிருந்த போது ஒரு பெண் போலீசார் அங்கு வந்து என் முன்னிலையிலும், அ.சா.2 ஆறுமுகம் என்பவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 மகஜர் மற்றும் வரைப்படம் தயார் செய்ததற்கு மகஜரில் நான் 1-வதாக சாட்சி கையொப்பம் செய்தேன். அ.சா.2 ஆறுமுகம் 2-வதாக சாட்சி கையொப்பம் செய்தார். அப்போது வீடியோ record செய்து கொண்டனர். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும், புகார்தாரர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC-140/2025 | Taluk | : |
| Deposition of Witness for | : PW-2 | Calling | : |
| Name | : ஆறுமுகம் | Religion | : |
| Father Name | : கணபதி | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th March 2026.

---

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை:-

1) நான் சிவகங்கை College road புத்தர் தெருவில் குடியிருந்து வருகின்றேன். அ.சா.1 நடத்தி வரும் Evion pet bottle என்கிற கம்பெனியில் மிஷின் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் மகஜர் மற்றும் வரைப்படம் என் முன்னிலையிலும் உருமநாதன் என்பவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தது தான். கடந்த 21.07.2024-ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் வழக்கம் போல் மேற்படி கம்பெனிக்கு வேலைக்கு வந்தேன். அப்போது அங்கிருந்த பொருட்கள் களவு போனது தொடர்பாக சார்பு ஆய்வாளர் வந்தார். பின்பு என் முன்னிலையிலும், உருமநாதன் என்பவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு மகஜர் மற்றும் வரைப்படம் தயார் செய்ததற்கு மகஜரில் நான் 2-வதாக சாட்சி கையொப்பம் செய்தேன். 1-வதாக உருமநாதன் சாட்சி கையொப்பம் செய்தார். அப்போது வீடியோ record செய்து கொண்டனர். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து செய்யவில்லை என்றாலும் சரிதான். புகார்தாரர் எனது Owner என்றால் சரிதான். புகார்தாரர் எனது முதலாளி என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் -2- என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC-140/2025 | Taluk | : |
| Deposition of Witness for | : PW-1 | Calling | : |
| Name | : திருஞானம் | Religion | : |
| Father Name | : கண்ணுசாமி | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th March 2026.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை அரசனேரி கீழமேட்டில் குடியிருந்து வருகின்றேன். நான் சிவகங்கை தொண்டி ரோட்டில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டையில் Evion pet bottle என்கிற பெயரில் தண்ணீர் பாட்டில் தயாரித்து விற்பனை செய்து வருகின்றேன். எனது கம்பேனியில் பெண்களும் ஆண்களும் வேலை செய்து வருகின்றனர். எனது மேற்படி கம்பேனியில் பயன்படுத்தாத 2-பாக்கெட் வயர்கள், திருவிழாவிற்காக எங்கள் கம்பேனியில் பணிபுரியும் பெண்களுக்கு கொடுப்பதற்காக 10 சில்க் கார்டன் சேலைகள் ஆகியவற்றை கம்பேனியின் காம்பவுண்டுக்குள் வைத்திருந்தேன். இரவு கம்பேனியை பூட்டி சாவியை எடுத்து சென்றுவிடுவேன். காம்பவுண்டுடை பூட்டி சாவியை எப்போதும் வைக்கும் இடமான காம்பவுண்டு அருகிலேயே மறைத்து வைத்துவிட்டு, மறுநாள் காலை 9.00 மணியளவில் கடந்த 21.07.2024-ம் தேதி வழக்கம்போல் கம்பேனியை காம்பவுண்டு பூட்டை திறந்து பார்த்த போது காம்பவுண்டுக்குள் வைத்திருந்த மேற்படி சேலைகள், வயர்கள் இருந்த மூட்டைகளை காணவில்லை. அப்போது எனது கம்பெனியில் வேலை பார்த்த மகேந்திரன், ஆறுமுகம் ஆகியோர்கள் உடனிருந்தனர். யாரோ எனது கம்பெனி காம்பவுண்டு கேட்டின் சாவியை வைக்கும் இடத்தை தெரிந்து கொண்டு மேற்படி பொருட்களை திருடிக்கொண்டு மீண்டும் சாவியை அதே இடத்தில் வைத்துவிட்டு சென்றுள்ளனர். மேற்படி திருடு போன பொருட்களின் மதிப்பு சுமார் 5000 முதல் 7000-க்குள் இருக்கும். மேற்படி திருடுபோன அலுமினிய சர்விஸ் வயர்கள் மற்றும் சேலைகள் ஆகியவற்றை கண்டுபிடித்து,

திருடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி சிவகங்கை நகர் குற்ற பிரிவு காவல் நிலையத்தில் புகார்மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள சேலைகள் மற்றும் வயர்கள் தான் என்னுடைய கம்பெனியில் இருந்து திருடுபோனவைகள் ஆகும். அந்த **புகைப்படம் அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

மேற்படி பொருட்கள் எவ்வாறு காணாமல் போனது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை மீண்டும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பொருட்களை யார் திருடியது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.